பக்கங்கள்: 07

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2056 ஆடி 29 வியாழக்கிழமை 14.08.2025 கதிர் 278

## இனிது ரகசியம் அல்ல!

முன்னாள் அயலுறவுத்துறை அமைச்சரும்சந்திரிகாஅம்மையாரால் அரசியலுக்குள் அழைத்து வரப்பட்டவருமான பேராசிரியர் பீரிஸ் அரசியலில் மீண்டும் தலைகாட்டத் ☞ 2

## புதிய பொலிஸ் மா அதிபர் அரசுத் தலைவரால் நியமிப்பு

நாட்டின் 37 ஆவது பொலிஸ்மா அதிபராக சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் சட்டத்தரணி பிரியந்த வீரசூரிய அரசுத் தலைவர் அநுரகுமாரவினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

புதிய பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரியவுக்கான நியமனக் கடிதத்தை அரசுத் தலைவரின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க நேற்று அரசுத் தலைவர் செயலகத்தில் வைத்து பொலிஸ்மா அதிபரிடம் கையளித்தார்.

இலங்கை பொலிஸ் சேவையில் பொலிஸ் கான்ஸ்டபிள், உப பொலிஸ் அத்தியட்சகர் ☞ 6

## அரச சார்பற்ற அமைப்புகள் சட்டமூல பிரதியை தரக்கேட்கிறது மனித உரிமைகள் ஆணைக்குழு

அடிப்படை உரிமைகளில் தாக்கங்களை ஏற்படுத்தக்கூடிய சாத்தியப்பாடு உடைய எந்தவொரு உத்தேச சட்டம் தொடர்பிலும் ஆணைக்குழுவின் அவதானிப்புக்கள் மற்றும் பரிந்துரைகள் ஆரம்பத்திலேயே பெறப்படவேண்டும். அதற்கமைய அரச சார்பற்ற அமைப்புக்கள் சட்டமூல வரைபின் பிரதியை இயலுமான விரைவில் தமக்கு அனுப்பிவைக்குமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சிடம் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது குறித்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தவிசாளர் தெஹிதெனியாவினால் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் செனெவிரத்னவுக்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கும் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

உங்களது அமைச்சின் பங்களிப்புடன் தயாரிக்கப்பட்டிருக்கும் அரச சார்பற்ற அமைப்புக்கள் (பதிவுசெய்தல் மற்றும் கண்காணித்தல்) சட்ட வரைபு தொடர்பில் உங்களுக்கு இந்தக் கடிதத்தை எழுதுகிறோம்.

இச்சட்ட வரைபானது அரச சார்பற்ற அமைப்புக்களைப் பதிவுசெய்தல் மற்றும் கண்காணித்தல் என்பவற்றுக்கு வாய்ப்பு ஏற்படுத்துவதையும், 1980 ஆம் ஆண்டு 31 ஆம் இலக்க தன்னார்வ சமூக சேவை அமைப்புக்கள் சட்டத்தை நீக்குவதையும் பிரதான நோக்கமாகக் ☞ 2

# கடையடைப்புப் போராட்டத்திற்கு வர்த்தக சங்கங்களின் ஆதரவை திரட்டுகின்றது தமிழ் அரசுக் கட்சி

## கிளிநொச்சி, வவுனியா சங்கங்கள் ஆதரவு வழங்க உறுதி





**வடக்கு கிழக்கு மாகாணங்களில் அளவுக் கதிகமாக இருக்கும் இராணுவத்தினரை அகற்றக்கோரி ஓகஸ்ட் 18 இடம்பெறவுள்ள முழு அளவிலான கடையடைப்புப் போராட்டத்திற்கு மாவட்ட வர்த்தக சங்கங்களின் ஆதரவைத் திரட்டும் முயற்சியில் தமிழ் அரசுக் கட்சி ஈடுபட்டுள்ளது.**

**கட்சியின் செயலாளர் சுமந்திரன் நேற்று கிளிநொச்சி மற்றும் வவுனியா மாவட்ட** ☞ 2

## மன்னாரில் காற்றாலை அமைக்கும் திட்டம் ஒரு மாத காலத்திற்கு மட்டும் இடைநிறுத்தம்

### அரசுத் தலைவருடனான சந்திப்பில் மக்களுக்கு தெளிவுபடுத்த முடிவு

மன்னார் காற்றாலைத் திட்டம் ஒருமாத காலத்திற்கு இடைநிறுத்தப்படுகிறது; அரசுத் தலைவருடனான சந்திப்பில் தீர்மானம்

மன்னாரில் காற்றாலை மின்னுற்பத்திக் கோபுரங்களை அமைக்கும் திட்டத்தை ஒரு மாதகாலத்திற்கு இடைநிறுத்திவைப்பதுடன், அதற்குள் குறித்த காற்றாலைத் திட்டம் தொடர்பாக உரிய தரப்பினர் மன்னார் மக்களின் அபிப்பிராயங்களை பெறுவதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மன்னாரில் காற்றாலை மின் உற்பத்திக் கோபுரங்களை அமைக்கும் சர்ச்சைக்குரிய விவகாரம் தொடர்பில் அரசுத் தலைவர் அனுர குமார திசாநாயக்கவுடன் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஏழுவர் மற்றும் மன்னார் பிரஜைகள் குழுப் பிரதிநிதிகள் உள்ளிட்ட தரப்பினர் நேற்று அரசுத்தலைவர் செயலகத்தில் சந்தித்து கலந்துரையாடலொன்றை நடாத்தியிருந்தனர். ☞ 2

## பிரதிப் பாதுகாப்பு அமைச்சருக்கு எதிரான பிரேரணையின் தார்ப்பரியத்தை ஆளும்தரப்பு புரிந்துகொள்ளவேண்டும்

### ஐக்கிய மக்கள் சக்தி தெரிவிப்பு

பிரதி பாதுகாப்பு அமைச்சர் அருண ஜயசேகர சாட்சிகளைப் பெற்றுக் கொள்ளக் கூடிய துறைகளில் அவர் முக்கிய பதவியை வகிப்பதானது உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகளுக்கு தடையாகவே இருக்கும். எந்த காரணத்தை அடிப்படையாகக் கொண்டு அவர் மீது நம்பிக்கையில்லா பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது என்பதை ஆளும்தரப்பு புரிந்து கொள்ள வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித்தார்.

நேற்று புதன்கிழமை செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்த அவர், மேலும் தெரிவித்ததாவது:

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுடன் தொடர்புடைய சாட்சியை மறைத்தார் என முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்களின் அடிப்படையிலேயே பிரதி பாதுகாப்பு அமைச்சருக்கெதிராக நம்பிக்கையில்லா பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இவ்வாறான குற்றச்சாட்டுக்களுடன் அவர் பாதுகாப்புத்துறையில் உயர்பதவியை வகிப்பது எந்த வகையிலும் பொறுத்தமற்றது. ☞ 6

## 'சுப்ரீம் செட்' செய்மதி தொடர்பான உண்மையை தெளிவுபடுத்தவேண்டும்

### ஐக்கிய தேசியக் கட்சி வலியுறுத்து

'சுப்ரிம் செட்' செயற்கை செய்மதி தொடர்பில் ஆளும்தரப்புக்குள் இருந்து பல்வேறு கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. அதனால் இதன் உண்மைத்தன்மை என்ன என்பது தொடர்பில் ஆளும்தரப்பு நாட்டுக்கு வெளிப்படுத்த வேண்டும். அத்துடன் அமைச்சரவையின் கூட்டுப்பொறுப்பை பாதுகாக்க தவறிய அமைச்சர் வசந்த சமரசிங்க தொடர்பில் அரசுத் தலைவர் எடுக்கும் நடவடிக்கை என்னவென்று கேட்கிறோமென ஐக்கிய தேசிய கட்சியின் பிரதி தவிசாளர் நவீன் திசநாயக்க தெரிவித்தார். ☞ 6

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விசாரணையை மூடி மறைப்பதற்கு ஆளும்தரப்பு முயற்சி

### நாமல் ராஜபக்ச கொதிப்பு

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகளை மூடிமறைப்பதற்கு ஆளும்தரப்பு முயற்சிக்கிறது. பாதுகாப்பு பிரதி அமைச்சருக்கு எதிரான நம்பிக்கை பிரேரணை ஆளும்தரப்பு விடுக்கும் ஒரு எச்சரிக்கையாகும் என்பதால் நம்பிக்கையில்லா பிரேரணைக்கு ஆதரவளிக்க தீர்மானித்துள்ளோம் என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

ஸ்ரீ லங்கா பொது ஜன பெரமுனவின் பணிமனையில் நேற்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் ☞ 2

## உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் உண்மையை வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும்

### ஐக்கிய மக்கள் சக்தியும் வலியுறுத்து

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் இடம்பெற்ற போது தற்போதைய பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகர கிழக்கு மாகாண கட்டளைத் தளபதியாக பணியாற்றினார். அதனை அடிப்படையாகக் கொண்டே அவருக்கெதிராக நம்பிக்கையில்லா பிரேரணை முன்வைக்கப்பட்டது. எனவே ஆளும்தரப்பு இதனை தோற்கடிப்பதற்காக செயற்படாமல் உண்மையை வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஐக்கிய ☞ 2

## சிறைச்சாலை சுகாதார சேவை முன்னாள் பணிப்பாளர் கைது

### இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில்

வெலிகடை சிறைச்சாலை வைத்தியசாலையில் கைதி ஒருவரை தொடர்ச்சியாக அனுமதித்து அவருக்கு சிகிச்சையளிப்பதற்கு 15 இலட்சம் கோரி அத்தொகையில் 3 இலட்சம் ரூபாவை இலஞ்சமாக பெற்றுக்கொண்ட சிறைச்சாலை சுகாதார சேவையின் முன்னாள் பிரதி பணிப்பாளர் இலஞ்சம் மற்றும் ஊழல் ☞ 6

காலைக்கதிர் Kalaikkathir

# ராஜபக்சக்கள் தவறிழைக்காதோரென காட்டுவதற்கே ஆளும்தரப்பினர் முயற்சி

## ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

ராஜபக்சக்கள் தவறானவர்கள் அல்லர் என்று மக்களுக்கு கூறுவதைப் போன்ற செயற்பாடுகளையேதற்போதையஆளும்தரப்பு முன்னெடுத்து வருகிறது. இது ஜே.வி.பி.க்கும் ராஜபக்சக்களுக்கும் இடையிலான அரசியல் ஒப்பந்தமாகும். இந்த கூட்டணியை தோற்கடிப்பதற்கான அரசியல் போராட்டத்தை ஐக்கிய மக்கள் சக்தி விரைவில் ஆரம்பிக்கும் என நாடாளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி தெரிவித்தார்.

களுத்துறை பிரதேசத்தில் செய்தியாளர்களிடம்இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ராஜபக்சக்கள்நாட்டைவங்குரோத்தடையச் செய்வதற்காக முன்னெடுத்த வேலைத் திட்டங்கள் தவறானவையல்ல என மக்களுக்கு கூறும் செயற்பாடுகளையே தற்போதைய ஜே.வி.பி. ஆளும்தரப்பு முன்னெடுத்து வருகிறது. இது ஜே.வி.பி.க்கும் ராஜபக்சர்களுக்குமிடையிலான அரசியல் ஒப்பந்தமாகும். ராஜபக்சர்களும் அநுரகுமார திஸாநாயக்க தரப்பினரும் இணைந்து தான் நாட்டில் இன்று இந்த நிலைமையை உருவாக்கியிருக்கின்றனர்.

செய்மதி விவகாரத்தில் ஜே.வி.பி.யின் செயற்பாடு இதனை தெளிவாகக் காண்பிக்கிறது. உகண்டாவில் பணம் பதுக்கி வைக்கப்பட்டிருப்பதாகக் கூறினர். ஆனால் இன்று வரை அதனை மீளப் பெறுவதற்கான எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அது குறித்து ஆளும்தரப்பில் எவரும் வாய் திறப்பதும் இல்லை. இவற்றைக் கூறி மக்களை ஏமாற்றி ஆட்சியைக்கைப்பற்றிவிட்டு, தற்போது ராஜபக்சர்கள் கள்வர்கள் அல்ல என்கின்றனர்.

கடந்த ஆட்சியில் ராஜபக்சர்களும், ரணில் விக்கிரமசிங்கவும் நண்பர்கள் என்பதைப் பார்த்தோம். இப்போது அவர்களுடன் அநுரகுமார திஸாநாயக்க தரப்பும் இணைந்துள்ளது என்ற யதார்த்தத்தை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். இந்தக் குழுவை தோற்கச் செய்வதற்கான அரசியல் போராட்டத்தை ஐக்கிய மக்கள் சக்தி விரைவில் ஆரம்பிக்கும் என்பதை நினைவுபடுத்துகின்றோம். ஜே.வி.பி. ஆட்சியமைப்பதற்கு தேசிய மக்கள் சக்தியே பிரதான காரணம்.

ஆனால் தேசிய மக்கள் சக்தியின் உரித்து பிரதமர் ஹரிணி அமரசூரிய வசமே காணப்படுகிறது. எனவே தான் ஹரிணியை ஓரங்கட்ட வேண்டிய தேவை ஜே.வி.பி;.க்கு காணப்படுகிறது. வசந்த சமரசிங்கவுக்கும், பிரதமருக்கும் முரண்பாடு இருப்பது பொய் அல்ல. ஆளும்தரப்பு அதை மறைக்க முயற்சிக்கிறது. பிரதமர் ஹரிணி இதைப் புரிந்து கொள்ள வேண்டும். ஜே.வி.பி. , தேசிய மக்கள் சக்தி இணைந்து நாடாளுமன்றத்தில் தொடர்ந்தும் பொய் கூறிக் கொண்டிருக்கிறது. இதுவே உண்மையாகும் என்றார்.

## இனி இது .....

தொடங்கியிருப்பது தொடர்பில் கடந்த வாரம் எனது வாசகர்களுடன் பகிர்ந்து கொண்டிருந்தேன். தமிழ், முஸ்லிம் கட்சிகள் பலவற்றின் தலைவர்கள் உள்ளிட்ட அரசியல்வாதிகளைச் சந்தித்து அவர் பேசியிருந்தார் என்பதையும் தெரிவித்திருந்தேன். இப்போது அதன் தொடர்ச்சியாக அவர் இன்று எதிர்க் கட்சிகளின் பிரதிநிதிகளுடன் மீண்டும் ஒரு கூட்டம் நடத்தவுள்ளாராம்.

நாடாளுமன்றத்தைஅங்கத்துவம்செய்யும் அரசியல் கட்சிகள் மற்றும் செயற்பாட்டு ரீதியிலான அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடும்அரசியல்கட்சிகளை ஒன்றிணைந்து கொள்கையடிப்படையில்பரந்துப்பட்டஅரசியல் கூட்டணிஒன்றைஅமைப்பதை இலக்காகக்க கொண்டு இந்த பேச்சு இடம்பெறவுள்ளதாதம்.

பீரிஸ் தலைமையில் கடந்த வாரம் கொழும்பில் உள்ள அவரது இல்லத்தில் நடந்தது முதற்கட்டப் பேச்சு என்றும் இன்று நடைபெறவுள்ளது அதன் தொடர்ச்சியான இரண்டாம் கட்டப் பேச்சு என்றும் தெரிவிக்கப்படுகிறது. இந்தப் பேச்சுக்கள் மூலம் உருவாக்கப்படும் புதிய அரசியல் கூட்டணிக்குத் தலைமை என்ற ஒன்று இருக்காதாம். பதிலாக ஆளும்தரப்புக்கு அழுத்தம் பிரயோகிக்கும் வகையில் பொது கொள்கையின் அடிப்படையில் கூட்டணி அமைப்பதை நோக்கமாகக் கொண்டே இப்போதைக்குக காய்கள் நகர்த்தப்படுகின்றனவாம்.

இச்சந்திப்பில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைவர் ரவூப் ஹக்கீம், தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர, அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர் ரிசாட் பதியுதீன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான ரமேஷ் பதிரன செஹான் சேமசிங்க லசந்த அழகியவன்ன மயந்த திஸாநாயக்க அநுர பிரியதர்ஷன யாப்பா சுசில் பிரேமஜயந்த பாட்டலி சம்பிக்க ரணவக்க இந்தியாவுக்கான இலங்கையின் முன்னாள் உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட ஆகியோர் ஏற்கனவே கலந்துக் கொண்டுள்ளனர்.

இன்றைய சந்திப்பில் மேலும் கட்சிகளின் பிரதிநிதிகளும் உயர் நிலைத் தலைவர்களும் பங்கெடுப்பார்கள் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. ஆளும்தரப்பிற்கு எதிராக பலமிக்க கூட்டணி ஒன்றை உருவாக்குவதற்கான முயற்சிகள் கடந்த பல மாதங்களாகத் தீவிரமாக இடம்பெறுகின்றன. ஆனால், அந்த முயற்சிகள் எவையும் வெற்றிபெறவில்லை. எல்லோரும் ஏறிச் சறுக்கின குதிரையில சக்கடத்தாரும் ஏறியிருக்கிறார் என்கிற கதையாக இப்போது பீரிஸ்இந்தப்பணியைக்கையிலெடுத்துள்ளார். பார்ப்போம் என்ன நடக்கிறது என்று. இதைச் செய்வதற்கு பீரிஸுக்கு இருக்கும் ஒரே தகுதி என்னவென்றால், தமிழ் மற்றும் முஸ்லிம் கட்சிகளைத் தவிர ஏனைய கட்சிகள் எல்லாவற்றிலும் அங்கம் வகித்தவர் அவர் ஒருவரே. சந்திரிக்காவின் சுதந்திரக் கட்சி, மக்கள் முன்னணி, மகிந்த ராஜபக்சவின் பொது ஜன பெரமுன, ரணில் விக்கிரமசிங்கவின் கூட்டணி என்று எல்லாத் தரப்புக்களிலும் இருந்தவர் அவர். தேசிய மக்கள் சக்தி மட்டும்தான் இன்னும் அவருக்கு இடம்கொடுக்கவில்லை. இந்தப் பேச்சின் சாதகவிளைவாக அதுவும்கூட நடக்கலாம். பார்ப்போம்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## கடையடைப்புப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வர்த்தக சங்கங்களின் பிரதிநிதிகளைச் சந்தித்து போராட்டத் திற்கு ஆதரவு தரும்படி கோரிக்கை விடுத்தார். ஆதரவளிப்பதாக அவர்கள் உறுதியளித்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

போராட்டத்தின் நியாயத்தை விளக்கிய சுமந்திரன், வடக்கு கிழக்கில் அளவுக்கதிகமாக நிலைகொண்டுள்ள இராணுவத்தினரை அகற்றுவதற்கான அவசியத்தை தமிழ் மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு வெளிப்படுத்த வேண்டிய அவசியத்தையும்வலியுறுத்தினார்.

நேற்றுக் காலையில் கிளிநொச்சி வர்த்தகர் சங்கப் பிரதிநிதிகளைச் சந்தித்து ஆதரவு திரட்டிய அவர், பிற்பகலில் வவுனியா வர்த்தகர் சங்கப் பிரதிநிதிகளையும் சந்தித்து ஆதரவு திரட்டினார். சந்திப்புக் குறித்து அவர் தெரிவித்ததாவது:

ஒகஸ்ட் 18 வடக்கு, கிழக்கு முழுவதும் முழு கடையடைப்புப் போராட்டத்திற்கு அழைப்பு விடுத்துள்ளோம். ஒகஸ்ட் 15 என போராட்டத் திகதி அறிவிக்கப்பட்ட நிலையில் மன்னார் மாவட்டத்தில் இருந்து வந்த கோரிக்கை காரணமாக அதனை 18 ஆம் திகதிக்கு மாற்றியுள்ளோம்.

முல்லைத்தீவு, மு-த்துஐயன்கட்டு குளக்கரையில் உள்ள இராணுவ முகாமுக்கு அழைக்கப்பட்டு இளைஞர்கள் ஐவர் அழைக்கப்பட்டு கடுமையாக தாக்கப்பட்டதில் ஒரு இளைஞர் உயிரிழந்த சம்பவத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்தே இப்போராட்டம் அழைக்கப்பட்டிருக்கின்றது.

அத்துடன்எமதுபகுதிகளில்மக்கள்மத்தியில் தேவைக்கு அதிகமான இராணுவக்குவிப்பு மற்றும் இராணுவ முகாம்கள் நீண்டகாலமாக நிலைகொண்டிருப்பதால் இப்படியான தொடர் விளைவுகள் ஏராளமாக நடக்கின்றன. எனவே இராணுவ முகாம்கள் அகற்றப்படவேண்டும். மக்களின் சாதாரண வாழ்க்கையிலே படையினரின் ஈடுபாடு இருக்கக்கூடாது என நீண்டநாட்களாக நாங்கள் சொல்லி வருகின்றோம். அதன் விளைவே இந்த உயிரிழப்பும்கூட.

இவற்றிற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் யாழ். செம்மணிப் மனிதப் புதைகுழிக்கு நீதியை வலியுறுத்தியும் இந்தப் போராட்டத்தை நடத்தத் தீர்மானித்துள்ளோம்.

வடக்கு கிழக்கை முற்றிலுமாக முடங்கச்செய்யும் போராட்டமாக இதனை நாம் நடத்தவேண்டும். வடக்கின் ஏனைய மாவட்டங்களின் வர்த்தகப் பிரதிநிதிகளுடனும்நாங்கள்கலந்துரையாடலை முன்னெடுத்துள்ளோம். அவர்கள்ஆதரவினை வழங்குவதாக சொல்லியிருக்கின்றனர். கிழக்கிலும் முழுமையான ஆதரவு வழங்குவதாக சொல்லியிருக்கின்றார்கள். இதுவரை கடையடைப்புப் போராட்டத்திற்கு முழு அளவில் ஆதரவு கிடைத்துள்ளது - என்றார்.

(100)

## அரச சார்பற்ற....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டிருக்கிறது என அறியமுடிகிறது.

இந்நிலையில் 1996 ஆம் ஆண்டு 21 ஆம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் 10(சி) பிரிவின்கீழ் எமது ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டுள்ள ஆணையை நிறைவேற்றுவதற்கு அரச சார்பற்ற அமைப்புக்கள் சட்ட வரைபின் பிரதியொன்றை எமக்கு வழங்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

நிகழ்நிலைக்காப்புச் சட்டமூலம் தொடர்பில் எமதுஆணைக்குழுவினால்முன்வைக்கப்பட்ட சில அவதானிப்புக்கள் மற்றும் பரிந்துரைகள் சட்டமா அதிபரால் உயர்நீதிமன்றத்துக்குப் பரிந்துரைக்கப்பட்ட முன்மொழிவுகளில் உள்வாங்கப்பட்டன என்பதை நீங்கள் அறிந்திருக்கக்கூடும்.

அந்தவகையில் அரச சார்பற்ற அமைப்புக்கள் (பதிவுசெய்தல் மற்றும் கண்காணித்தல்) சட்டமூலமானது உங்களது அமைச்சினால் வர்த்தமானியில் வெளியிடப்பட்டதன் பின்னரேயே அதுகுறித்து அவதானிப்புக்களையும், பரிந்துரைகளையும் முன்வைக்கக்கூடியநிலையில்ஆணைக்குழு இருக்கிறது.

ஆனால் பொதுவாக அடிப்படை உரிமைகளில்தாக்கங்களைஏற்படுத்தக்கூடிய சாத்தியப்பாடு உடைய எந்தவொரு உத்தேச சட்டம் தொடர்பிலும் ஆணைக்குழுவின் அவதானிப்புக்கள் மற்றும் பரிந்துரைகள் ஆரம்பத்திலேயே பெறப்படவேண்டும். இவ்வாறானதொரு பின்னணியில் அரச சார்பற்ற அமைப்புக்கள் சட்டமூல வரைபின் பிரதியை இயலுமானவரை விரைவாக ஆணைக்குழுவுடன் பகிர்ந்துகொள்ளுங்கள் என அக்கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

## நாமல் ராஜபக்ச....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்ததாவது:

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல்கள் விவகாரம் முழுமையாக அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளது. குண்டுத்தாக்குதலை பிரதான அரசியல் பரப்புரையாக்கியே இந்த ஆளும்தரப்பு ஆட்சிக்கு வந்தது. முன்னாள் அரசுத் தலைவர்களான மஹிந்த ராஜபக்ச , கோட்டபய ராஜபக்ச மீது குற்றஞ்சாட்டப்பட்டது.

குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் ராஜபக்சர்கள் மீது முன்வைத்த குற்றச்சாட்டுக்களை ஆளும்தரப்பு சட்டத்தின் முன் நிரூபிக்கவேண்டும். உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகளை மூடிமறைப்பதற்கு ஆளும்தரப்பு முயற்சிக்கிறது. பாதுகாப்பு பிரதி அமைச்சருக்குஎதிரானநம்பிக்கைபிரேரணை ஆளும்தரப்புவிடுக்கும்ஒருஎச்சரிக்கையாகும் என்பதால் நம்பிக்கையில்லா பிரேரணைக்கு ஆதரவளிக்க தீர்மானித்துள்ளோம்.

குண்டுத் தாக்குதலின் பிரதான தற்கொலைதாரிகளின் தந்தை மக்கள் விடுதலை முன்னணியின் உறுப்பினர். அவருக்கு எதிராக கட்சி மட்டத்தில் எவ்வித நடவடிக்கைகளும் இதுவரையில் எடுக்கப் படவில்லை. குண்டுத்தாக்குதலின் உண்மை வெளிவர வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உறுதியாகவுள்ளோம் என்றார்.

## மன்னாரில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இக்கலந்துரையாடலிலேயே மேற்கண்டவாறு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும் இக்கலந்துரையாடல் தொடர்பில் தெரியவருகையில்,

மன்னார் தீவில், மக்கள் குடியிருப்புக்கள் உள்ள பகுதிக்குள் இத்தகைய காற்றாலைத் திட்டங்கள் தேவையில்லை என இக்கலந்துரையாடலில் கலந்துகொண்ட வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும், மன்னார் பிரஜைகள் குழுப் பிரதிநிதிகளாலும் அரசுத் தலைவர்யிடம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அத்தோடு மன்னாரில் காற்றாலை அமைக்கும் திட்டத்திற்கு மன்னார் மக்கள் எதிரானவர்களில்லையெனவும், மன்னார்த் தீவிற்குள் குடியிருப்புக்கள் உள்ள பகுதிக்குள் காற்றாலை மின் உற்பத்திக் கோபுரங்கள் அமைக்கும் செயற்பாட்டையே மன்னார் மக்கள் எதிர்ப்பதாகவும் அரசுத் தலைவரிடம் இதன்போது தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

அதேவேளை கடந்தகால இனவாத ஆளும்தரப்புக்கள் இத்தகைய காற்றாலை மின்உற்பத்திக் கோபுரங்களை அமைப்பதற்கான அமைச்சரவை அனுமதிகளை வழங்கியுள்ளபோதும், கற்றாலை அமைப்பது தொடர்பில் மக்களின் கருத்துக்கள், ஆலோசனைகள் கேட்டறியப்படவில்லை எனவும் இதன்போது அரசுத் தலைவரிடம் சுட்டிக்காட்டப்பட்டதுடன், காற்றாலைத் திட்டம் தொடர்பில் மக்களுக்கு தெளிவுபடுத்துவதுடன், இவ்விடயத்தில் மன்னார் மக்களின் அபிப்பிராயங்களும் ஏற்றுக்கொள்ளப்படவேண்டும் எனவும் அரசுத் தலைவரிடம் வலியுறுத்தப்பட்டது.

மேலும்இதன்போதுமன்னார்காற்றாலைத் திட்டத்தால் ஏற்படும் சிக்கல் மற்றும் பாதிப்பு நிலமைகள் தொடர்பிலும் இதன்போது அரசுத் தலைவருக்கு எடுத்துரைக்கப்பட்டள்ளது.

இந்நிலையில் குறித்த காற்றாலைத் திட்டத்தை ஒருமாத காலத்திற்கு இடைநிறுத்தி, மக்களின் அபிப்பிராயங்களைப் பெறுவதென முடிவெடுக்கப்பட்டுள்ளது.

மேலும் இச்சந்திப்பில் வன்னிமாவட்ட நாடாளுமன்றஉறுப்பினர்களான துரைராசா ரவிகரன், பத்மநாதன் சத்தியலிங்கம், செல்வம் அடைக்கலநாதன், காதர் மஸ்தான், ரிஷாட் பதியுதீன், உபாலி சமரசிங்க, மயில்வாகனம் ஜெகதீஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டிருந்ததுடன், மன்னார் பிரஜைகள் குழு உறுப்பினர்கள் உள்ளிட்ட பலரும் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## உயிர்த்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் பணியிடத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்த அவர் மேலும் தெரிவித்ததாவது:

உயிர்த்தஞாயிறுதாக்குதல்கள்இடம்பெற்ற போது தற்போதைய பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகர கிழக்கு மாகாண கட்டளைத் தளபதியாக பணியாற்றினார். கிழக்கிலுள்ள பல நபர்கள் தொடர்பில் இந்த தாக்குதல்கள் குறித்துகுற்றச்சாட்டுக்கள்முன்வைக்கப்பட்டன. எனவே தற்போது பிரதான சூத்திரதாரியை இனங்காண்பதற்கான விசாரணைகளுக்கு தடையான காரணிகளை நீக்க வேண்டியது ஆளும்தரப்பின் பொறுப்பாகும்.

அந்த அடிப்படையிலேயே பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகர பதவி விலக வேண்டும் என்பதை வலியுறுத்தியிருந்தோம். எனினும் அவர் அதற்கு மறுப்பு தெரிவித்தமையால் அவருக்கெதிராக நம்பிக்கையில்லா பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. நம்பிக்கையில்லா பிரேரணை மீதான விவாதம் விரைவில் நடத்தப்பட வேண்டும்என எதிர்பார்க்கின்றோம். உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபர் யார் என மக்கள் பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

அரசுத் தலைவர் அநுரகுமார கத்தோலிக்க சபைக்கு இது குறித்து வாக்குறுதி யளித்திருக்கின்றார். அந்த வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டியது அவரது பொறுப்பாகும். எனவே நம்பிக்கையில்லா பிரேரணையை தோற்கடிப்பதற்கான நடவடிக்கைகளை விடுத்து, உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களைபக்கசார்பின்றியும்,வெளிப்படை தன்மையுடனும் முன்னெடுப்பதற்கான

தொடர்ச்சி 6ம் பக்கம்....


புதிய கல்வியாண்டு
2025
zoom
76667-4945
LEARN EASY
E
KNOWLEDGE IS POWER
January 25 FREE
February 5
தமிழ் English
கணிதம் விஞ்ஞானம்
வரலாறு சிங்களம்
கணக்கீடு
English Literature
ICT
தரம் 6
தொடக்கம்
தரம் 11
வரை


உங்கள் கனவை நனவாக்க ...!
NVQ Level 3 & 4 Courses
புதிய பிரிவுகள்
ஆரம்பம்
20.04.2025
கற்கும் போதே
தொழில் ஆற்றக்
கூடிய வாய்ப்பு
•CARE GIVER COURSE
(பராமரிப்பாளர் பயிற்சி)
•NURSE ASSISTANT COURSE
(தாதிய உதவியாளர் பயிற்சி)
கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன்
3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்
தகுதி:
•வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
•ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
•GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி
JDr
JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY
46, Brodie Lane , Jaffna.
தொடர்பு:070 7070 722

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## கஞ்சாவிற்கு அனுமதி – புகையிலைக்கு தடை இந்த வகை இரட்டை நிலைப்பாடு ஏன்?

அரசு சமீபத்தில் எடுத்த முடிவு – ஏற்றுமதிக்காக கடும் வரையறைகளுடன் கஞ்சாவை உற்பத்தி செய்வதை அனுமதித்தல்—நாட்டில் பல்வேறு விவாதங்களை ஏற்படுத்தியுள்ளது. அதேசமயம், வடக்கின் முக்கிய பணப்பயிராகக் கருதப்படும் புகையிலைப் பயிரிடுவதற்கு தடை விதித்திருப்பது, இந்த விவாதத்தை இன்னும் கூர்மையாக்கியுள்ளது. இங்கு எழும் அடிப்படை கேள்வி – ஏன் ஒரே அரசு, பொருளாதார ஆதாயத்திற்காக கஞ்சா உற்பத்தியை அனுமதிக்கிறது, ஆனால், பல ஆண்டுகளாக ஆயிரக்கணக்கான விவசாயிகளின் வாழ்வாதாரமாக இருந்த புகையிலைப் பயிரை முடக்குகிறது?

வடக்கு மாகாணத்தில், குறிப்பாக யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா பகுதிகளில், புகையிலை விவசாயம் நீண்ட வரலாறு கொண்டது. வறண்ட நிலங்களில், குறைந்த நீர்வளத்துடனும், அதிக லாபம் தரக்கூடிய பயிராக புகையிலை வளர்க்கப்படுகிறது. பல விவசாய குடும்பங்கள், தலைமுறைகளாக இதனை நம்பியே வாழ்ந்து வருகின்றன. பயிரிடும் முறை, அறுவடை, விற்பனை—அனைத்திலும் ஒரு உறுதியான சந்தை அமைப்பு உருவாகியுள்ளது. ஆனால், அரசு சமீப ஆண்டுகளில் புகையிலைப் பயிரிடுவதற்கு பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்தது. தற்போது, முற்றிலும் தடை விதிக்கப்படுவதால், விவசாயிகள் தங்கள் வாழ்வாதாரத்தை இழக்கும் அபாயத்தில் உள்ளனர்.

நுரையீரல் நோய்கள், புற்றுநோய், இதய நோய்கள் போன்றவற்றில் புகையிலை முக்கிய காரணிகளில் ஒன்று என்பதில் எந்த ஐயமும் இல்லை. ஆனால், இங்கு ஒரு முரண்பாடு வெளிப்படுகிறது. அதே அரசு, கஞ்சா உற்பத்தியை (cannabis cultivation) ஏற்றுமதிக்காக அனுமதிக்கிறது. கஞ்சா தொடர்பிலும், உலக சுகாதார அமைப்புகள் மற்றும் பல்வேறு மருத்துவ ஆய்வுகள், அதன் அடிமைத்தன்மை மற்றும் உளவியல் பாதிப்புகள் குறித்து எச்சரித்துள்ளன. அதனாலேயே உள்நாட்டில் கஞ்சாவின் பொதுப் பயன்பாட்டுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

கஞ்சா உற்பத்தி முழுமையாக ஏற்றுமதிக்காக மட்டுமே, நாட்டிற்குள் விற்பனை செய்யப்படாது; அது மருத்துவ, தொழில்துறை பயன்பாட்டிற்காக மட்டுமே பயன்படுத்தப்படும் என்று ஆளும்தரப்பு விளக்கம் கூ-றுகின்றது. கஞ்சா உற்பத்தி மீது கட்டுப்பாடு, அனுமதி, கண்காணிப்பு—இவை அனைத்தும் கடுமையாக இருக்கும் என்று கூறுகின்றது. ஆனால், புகையிலையையும் இதேபோல் கட்டுப்படுத்தி, ஏற்றுமதி வாய்ப்புகளை ஆராய முடியாதா? புகையிலைப் பயன்பாட்டின் தீமைகளைச் சுட்டிக்காட்டி தடை விதிப்பதோடு, கஞ்சா போன்ற விவாதப்பூர்வமான பயிருக்கு அனுமதி அளிப்பது, கொள்கை முரண்பாடாகவே தெரிகிறது.

இது, வடக்கு விவசாயிகளின் பார்வையில் இன்னும் வேதனையானதாக உள்ளது. புகையிலை அவர்கள் வாழ்வாதாரத்தின் மையமாக இருந்தது. அதன் மூலம் கல்விச் செலவுகள், வீட்டு கட்டடம், குடும்ப நலன்கள் அனைத்தும் மேற்கொள்ளப்பட்டன. மாற்றுப் பயிரிடும் வாய்ப்புகள் குறைவாக இருக்கும் வறண்ட நிலப்பரப்பில், புகையிலை ஒரு பொருளாதார தேவதையாக இருந்தது. தடை விதிப்பதன் மூலம், அரசு அந்த வாழ்வாதாரத்தை முற்றிலும் துண்டிக்கிறது.

கஞ்சா உற்பத்திக்கு அனுமதி வழங்கப்படுவது, முக்கியமாக வெளிநாட்டு முதலீடுகள், ஏற்றுமதி வருவாய், மற்றும் உலக சந்தை தேவை என்பதற்காக. அதாவது, பொருளாதார பலன் அதிகம் கிடைக்கும் என அரசு கருதுகிறது. ஆனால், புகையிலையையும் சர்வதேச சந்தைகளில் விற்பனை செய்யும் வழிகள் உள்ளன. சில நாடுகளில், புகையிலை உற்பத்தி இன்னும் ஒரு முக்கிய ஏற்றுமதி துறையாகவே இருக்கிறது. எனவே, புகையிலை விவசாயத்தை முற்றிலும் முடக்கும் பதிலாக, அதன் உற்பத்தியை கட்டுப்படுத்தி, தரத்தை மேம்படுத்தி, வெளிநாட்டு சந்தைக்குரியதாக அதனை மாற்றி அமைக்கலாம்.

"ஏற்றுமதி கஞ்சா – நல்லது; புகையிலை – தீமை" என்ற எளிய வகைப்படுத்தலின் மீது அமைந்துள்ள அரச கொள்கை நகைப்புக்கிடமானது. ஆனால், இரண்டிலும் மனித உடல்நலத்திற்கான அபாயங்கள் உள்ளன. வித்தியாசம் என்னவென்றால், கஞ்சா ஏற்றுமதியின் மூலம் அரசு பெறும் பொருளாதார லாபம். இதனால், கொள்கையில் நீதியற்ற பொருளாதார சாய்வு உள்ளது என்ற குற்றச்சாட்டு எழுகிறது.

புகையிலை விவசாயிகளை பாதிக்கும் அரசின் தடை, வடக்கில் சமூக–அரசியல் விளைவுகளையும் ஏற்படுத்தும் அபாயம் உண்டு. பல ஆயிரம் குடும்பங்கள் தங்கள் முக்கிய வருமானத்தை இழக்கின்றன. மாற்றுப் பயிரிடும் வாய்ப்புகள் வழங்கப்படாவிட்டால், வறுமை, வேலை இல்லாமை, கடன் சுமைகள் போன்ற பிரச்சினைகள் தீவிரமடையும். இதன் விளைவாக, அரசின் மீது மக்கள் கோபம் அதிகரிக்கும். எனவே, அரசின் கொள்கை ஒரே தரப்படுத்தலுடன், வெளிப்படைத்தன்மையுடன் இருக்க வேண்டும்.

கஞ்சாவுக்கு அனுமதி வழங்கும் போது, புகையிலை விவசாயத்தையும் முற்றிலும் தடை செய்யாமல், கட்டுப்பாடுகளுடன் தொடர்வதற்கான திட்டங்களை உருவாக்கவேண்டும். ஆளும்தரப்பின் ஆதரவு வேண்டும்.

அரசு, பொருளாதார வளர்ச்சி, மக்கள் நலன், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, மற்றும் சுகாதார பாதுகாப்பு—இவற்றை சமநிலைப்படுத்திய கொள்கையையே உருவாக்க வேண்டும். ஒரு பக்கம், "கஞ்சா ஏற்றுமதி மூலம் நாணய வருவாய்" என்ற பெயரில் அனுமதி வழங்கி, மறுபக்கம், "சுகாதார பாதிப்பு" என்ற பெயரில் புகையிலையைத் தடை செய்வது — இரட்டை நிலைப்பாடு என்பதில் சந்தேகமில்லை.

வடக்கு விவசாயிகளின் குரல் கேட்கப்பட்டு, கொள்கையில் மாற்றம் கொண்டுவரப்படாவிட்டால், இந்த முடிவு பொருளாதாரத்திலும், சமூக அமைதியிலும் நீண்டகால பாதிப்பை ஏற்படுத்தும் அபாயம் உறுதி. அரசு, ஒரு கையில் அனுமதி, மற்ற கையில் தடை என்ற கொள்கையிலிருந்து விலகி, அனைவருக்கும் சமமான, நியாயமான தீர்வை வழங்கவேண்டும்.

# முல்லைத்தீவு இளைஞர் இறப்பு தொடர்பில் தவறுசெய்தோர் நீதியின் முன் நிறுத்தப்படுவர்

## பாதுகாப்பு அமைச்சர் உறுதியளிப்பு

முல்லைத்தீவு முத்தையன்கட்டு இராணுவ முகாமில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பாக நீதியான விசாரணை இடம்பெற்றுவருகின்றது தவறு செய்தால் யார் என்றாலும் அவர்களை நீதியின் முன் நிறுத்துவது எமது பொறுப்பாகும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேயபால தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டம் நேற்று பழைய கச்சேரி மண்டபத்தில் அபிவிருத்திகுழு தலைவர் அமைச்சர் சுனில் ஹந்தி நெத்தி தலைமையில் இடம்பெற்றது இதில் கலந்துகொண்ட பின்னர் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேயபால செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார்.

முல்லைத்தீவு முத்தையன்கட்டு இராணுவமுகாமில் இளைஞர் ஒருவர் உயிரிழந்த சம்பவம் ஊடகவியலாளர் மற்றும் பொதுமக்கள் அனைவருக்கும் தெரியும் அவர்கள் அனுமதியின்றி உள்ளே நுழைந்தனராக இருந்தபோதும் அவர்கள் தாக்கப்பட்டது தொடர்பாக 3 படையினர் கைது செய்யப்பட்டுள்ளனர். விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன அங்கு இரும்பு திருடப்பட்டதாகத் தெரியவந்துள்ளதுடன் இது தொடர்பில் இராணுவத்தினர் விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர் இந்த இரும்பு கடத்தலில் 3 இராணுவத்தினர் ஈடுபட்டனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதன்நிமித்தம் 3 இராணுவத்தினரை கைது செய்து நீதிமன்றில் நிறுத்தி விளக்கமறியலில் வைக்கப்பட்டு விசாரணை தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது நீதியாக விசாரணை இடம் பெற்றுவருகின்றது தவறு செய்தால்யாரென்றாலும்அவர்களைநீதியின் முன் நிறுத்துவது எமது பொறுப்பாகும்.

அதேவேளை இராணுவ முகாங்களையோ பொலிஸ் நிலையங்களையோ அவசியம் இல்லாமல் அகற்ற வேண்டியது இல்லை என அரசுத் தலைவர் ஆலோசனை வழங்கியுள்ளார். எனவே பாதுகாப்பு அமைச்சர் என்ற முறையில் பாதுகாப்பான அல்லது முக்கியமான இடங்களை தவிர நில விடுவிப்பினை தொடக்கத்தில் இருந்து மேற்கொள்கின்றோம்.

நிலப் பிரச்சனை தொடர்பாக இன்று விவாதித்தோம் எனவே எங்கள் முதல் நோக்கம் மக்களின் நிலம் பொலிஸ் நிலையங்கள் கையகப்படுத்தி இருந்தால் மாற்று இடத்தை கண்டுபிடிப்பதாகும். எனவே தேவையற்ற குழப்பத்தை உருவாக்குவது அல்ல மக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதே எங்கள் கொள்கை என்றார்.

# செம்மணிக் குற்றவாளிகளை தண்டிக்கவேண்டும் அதுவே தற்போதைய ஆளும்தரப்பின் நிலைப்பாடு

## அமைச்சர் சந்திரசேகரன் தெரிவிப்பு

செம்மணி புதைகுழி தொடர்பான விசாரணைகள் முறையாக நடத்தப்பட்டு வருகின்றன. தேவையான வளங்களை ஆளும்தரப்பு வழங்கி வருகிறது. குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டு, நிச்சயம் தண்டிக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே ஆளும்தரப்பு உள்ளது என்று கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் சந்திரசேகரன் தெரிவித்தார்.

அத்துடன், நாமல் ராஜபக்சவின் நீலப்படையணியில் இருந்த சாணக்கியன் மற்றும் ரணிலின் விசுவாசியான சுமந்திரன் ஆகியோரின் தாளத்துக்கேற்ப ஆடுவதற்கு எமது மக்கள் கொண்டை கட்டிய சீனர்கள் அல்லர் எனவும் அமைச்சர் கூறினார்.

காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் காணியில் வசித்து வரும் யாழ்ப்பாண மாவட்டத்தின் சாவகச்சேரி பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த 32 பேருக்கும், கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த 300 பேருக்கும் நேற்றுகாணி உரிமைப் பத்திரம்வழங்கும்நிகழ்வுகிளிநொச்சி,பளைமத்திய கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில், கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்பாசன அமைச்சர் கே.டி.லால்காந்த, வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், பிரதி அமைச்சர் கலாநிதி சுனில் ரணசிங்க, நாடாளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன், பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தவிசாளர் சுரேன், காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் தவிசாளர் கே.நிஹால், யாழ்ப்பாணம்மற்றும்கிளிநொச்சிமாவட்டங்களின் மாவட்டச் செயலாளர்கள், சாவகச்சேரி, பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

நிகழ்வில் உரையாற்றிய அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:

காணிஉரிமைவழங்கும்வேலைத்திட்டத்தை வடக்கில் இருந்தே ஆரம்பித்துள்ளோம். வடக்கு மக்களின் வாழ்வில் என்றைக்கு வசந்தம் துளிர்விடுகின்றதோ அன்றுதான் எமது வாழ்விலும் வசந்தம் ஏற்படும். ஏனெனில், இது மக்களுக்கான அரசாங்கமாகும்.

சுமந்திரனுக்கு ரணிலுடன் இருக்கும்போது நல்லது. யாழ். நூலகத்தை எரித்த பாவிகளின் பைல்களை தூக்கிக்கொண்டு திரியும்போது தமிழ் மக்களின் பிரச்சினை அவருக்கு தெரியவரவில்லை. ஆனால் இன்று அவர் ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுக்கின்றார்.

மட்டக்களப்பில் 10, 15 பேரை அழைத்து சாணக்கியன் இன்று ஆர்ப்பாட்டம் நடத்துகின்றார். அவர் நாமல் ராஜபக்சவின் நீலப்படையணியில் இருந்தவர் ஆவார்.

கடந்தகால கொலைகள் தொடர்பில் கண்டறியப்பட வேண்டும். அதனால்தான் செம்மணி புதைகுழி தொடர்பான அகழ்வுப் பணி மற்றும் விசாரணைக்கு ஆளும்தரப்பு முழு ஒத்துழைப்பு வழங்கிவருகிறது. குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டு, தண்டிக்கப்பட வேண்டும் என்பதில் மாற்றுக்கருத்து கிடையாது.

'மன்னாரில்காற்றாலைமின்திட்டம்தொடர்பில் பிரச்சினைஎழுந்துள்ளது. அங்குள்ளகனியமணல் அகழ்வுஇடம்பெறுகின்றதாம். இதனால்மக்களின் காணிகள் சூறையாடப்படப்போகின்றதாம் என ரிஷாட் பதியுதீன் கூறுகின்றார்.

காற்றாலை மின் உற்பத்திக்கு கடந்த காலங்களில் இந்த பாவிகள்தான் காணி வழங்கினார்கள். அதற்குரிய அனுமதியையும் இந்த பாவிகளே வழங்கினர். கனிய மணல் அகழ்வுக்கும் ராஜபக்ச, ரணில் ஆட்சியில் அமைச்சராக இருந்த பாவிகள்தான் அனுமதி வழங்கினர் எனவும் அமைச்சர் சந்திரசேகர் மேலும் குறிப்பிட்டார்.

# வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கான ஆளும்தரப்பின் வழி வரைபடம் என்ன?

## ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் கேள்வி

'இன்று, பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்குவது, சட்டத்தின் ஆட்சியை மீட்டெடுப்பது, பாகுபாடு மற்றும் பிளவுபடுத்தும் அரசியலை நீக்குவது உள்ளிட்ட நீண்டகால பிரச்சினைகளில் இருந்து விடுபட்டு இலங்கை கடந்த காலத்திலிருந்து மீண்டெழுவதற்கு அருமையான ஒரு வாய்ப்பை முன்வைப்பதற்கு அரசியல் தலைமைக்கு சந்தர்ப்பம் கிட்டியிருக்கின்றது. இந்த உறுதிமொழிகளை பயனுள்ள விளைவுகளாக மாற்றுவதற்கு இப்போது ஒரு விரிவான சாலை வரைபடம் தேவை' என்று ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க் அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.'இந்தச் செயல்முறை, உள்நாட்டுப் போரின்போது நடந்த மீறல்கள், துஷ்பிரயோகங்கள் மற்றும் குற்றங்கள், அரசு மற்றும் பாதுகாப்புப் படையினர்,

அதேபோல் எல்.ரி.ரி.ஈ. போன்ற அரசு சாராத ஆயுதக் குழுக்களின் பொறுப்பு மற்றும் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சமூகங்கள் மீது இந்த வன்முறையின் நீடித்த தாக்கம் ஆகியவற்றின் தெளிவான மற்றும் முறையான விசாரணைகளை ஏற்றுக்கொண்ட ஒப்புதலுடன் தொடங்கவேண்டும்.இலங்கைக்கான எனது பயணத்தின்போது நான் நேரில் கண்டமை போல, பாதிக்கப்பட்டவர்களின் வலி மற்றும் துன்பம் இன்னும் தெளிவாகத் தெரிகின்றது. மேலும் உண்மை மற்றும் நீதிக்கான அவர்களின் கோரிக்கைகள் கவனிக்கப்படவேண்டும் - என்றும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கைக்கு உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்ட சொற்ப காலத்திலேயே இந்த அறிக்கை வெளியாகியுள்ளது. இலங்கையில் அவர் அரசு, சிவில் சமூகம், பாதிக்கப்பட்டவர்களின் குழுக்கள், அரசியல் கட்சிகள் மற்றும் மதத் தலைவர்களுடன் கலந்துரையாடி, திருகோணமலை, யாழ்ப்பாணம் மற்றும் கண்டி ஆகிய இடங்களுக்கு விஜயம் செய்தார். இந்த அறிக்கை பாதுகாப்புத் துறையின் விரிவான கட்டமைப்பு சீர்திருத்தத்துக்கும், நாட்டின் சர்வதேச மனித உரிமைகள் தொடர்பான கடமைப்பாடுகளுக்கு இணங்க பரந்த அரசமைப்பு, சட்ட மற்றும் நிறுவன சீர்திருத்தங்களுக்கும் அழைப்பு விடுக்கின்றது.

'இந்த நடவடிக்கைகள் அரசின் 'தேசிய ஒற்றுமை' என்ற தொலைநோக்கு பார்வையை உணர்ந்து கொள்வதற்கும், எல்லாவற்றுக்கும் மேலாக கடந்த கால மீறல்கள் மீண்டும் நிகழாமல் இருப்பதை உறுதி செய்வதற்கும் மிக முக்கியமானவை' - என்றும் வோல்கர் டர்க் கூறியுள்ளார்.

பொறுப்புக்கூறல், நல்லிணக்கம் மற்றும் மனித உரிமைகளை முன்னேற்றுவதில் இலங்கையை ஆதரிப்பதற்கான ஐ.நா. மனித உரிமைகள் அலுவலகத்தின் தொடர்ச்சியான உறுதிப்பாட்டை அவர் மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

ஒரு சுயாதீனமான பொது வழக்குத் தொடுநர் அலுவலகத்தை நிறுவுவதற்கான அரசின் முன்முயற்சியை அறிக்கை வரவேற்கின்றது. கடுமையான மனித உரிமை மீறல்கள் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்டத்தின் கடுமையான மீறல்கள் தொடர்பான வழக்குகளை விசாரிக்க ஒரு சுயாதீனமான சிறப்பு ஆலோசகர் உட்பட ஓர் அர்ப்பணிப்புள்ள நீதித்துறை பொறிமுறையை நிறுவ அறிக்கை பரிந்துரைக்கின்றது.

மேலும், வடக்கு மற்றும் கிழக்கில் இராணுவத்தால் கைப்பற்றப்பட்ட நிலங்களை விடுவித்தல், பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை இரத்துச் செய்தல் மற்றும் நீண்டகாலமாகப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டவர்களை விடுவித்தல் (அவர்களில் சிலர் இப்போது பல தசாப்தங்களாக சிறையில் உள்ளனர்.) ஆகியவற்றையும் அறிக்கை கோருகின்றது.

இலங்கையிலும் சர்வதேச அளவிலும் அர்த்தமுள்ள பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்க முயற்சிகளுக்கு பங்களிக்குமாறு இந்த அறிக்கை சர்வதேச சமூகத்தையும் வலியுறுத்துகின்றது. 'சர்வதேச சட்டத்தின் கீழ் குற்றங்களை விசாரித்து, வழக்குத் தொடுத்து, பொறுப்புக்கூறலை உறுதி செய்வதற்கான முதன்மை பொறுப்பு இலங்கை அரசிடம் இருந்தாலும், இதை சர்வதேச வழிமுறைகளால் பூர்த்தியாக்கி ஈடு செய்ய முடியும் என்றும் அறிக்கை கூறுகின்றது.

குறிப்பாக பொறுப்புக்கூறல் தொடர்பான பணிகளை மேற்கொள்வதற்கும் நல்லிணக்க முயற்சிகளுக்கு பங்களிப்பதற்கும் ஐ.நா. மனித உரிமைகள் அலுவலகத்தின் வலுப்படுத்தப்பட்ட திறனைப் பயன்படுத்த ஐ.நா. உறுப்பு நாடுகளை அறிக்கை வலியுறுத்துகின்றது.

நினைவுகூரல் மற்றும் விவாதத்துக்கு அரசு இடம் அளித்துள்ள நிலையில், சிவில் சமூகச் செயற்பாட்டாளர்களை- குறிப்பாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் மற்றும் பொறுப்புக்கூறல் நடவடிக்கைகளுக்காகச் செயற்படுபவர்களை - காணித் தகராறுகள் மற்றும் சுற்றுச்சூழல் பிரச்சினைகளுக்ககப் பணியாற்றுபவர்களை - குறிவைத்துத் தொடர்ந்து மிரட்டல்கள் மற்றும் துன்புறுத்தல்கள் இடம்பெறுகின்றமையை அறிக்கை விவரிக்கின்றது.

அத்துடன் காணாமல்போனவர்களின் குடும்பங்கள் மிரட்டப்படுகின்றமை மற்றும் கண்காணிப்புக்கு உட்படுத்தப்படுகின்றமை ஆகியவற்றையும் அறிக்கை விவரிக்கின்றது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இரத்துச் செய்வதற்கான உறுதிமொழிகள் இருந்தபோதிலும், புதிய அரசு மக்களைக் கைது செய்து தடுத்து வைக்க இந்தச் சட்டத்தைத் தொடர்ந்து பயன்படுத்துகின்றது. தொடர்ந்து நடைபெறும் தன்னிச்சையான கைதுகள் மற்றும் தடுப்புக்காவல்கள், சித்திரவதைகள் மற்றும் காவலில் உள்ள இறப்புக்கள் ஆகியவற்றை இந்த அறிக்கை விவரிக்கின்றது. மேலும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பயன்படுத்துவதற்கு உடனடித் தடை விதிக்குமாறு அரசை அது வலியுறுத்துகின்றது.

கருத்து வெளிப்பாடு மற்றும் கருத்துச் சுதந்திரம், கூட்டிணைதல் மற்றும் அமைதியான ஒன்றுகூடல் போன்ற அடிப்படை உரிமைகளைக் கட்டுப்படுத்தும் பிற சட்டங்கள் அல்லது முன்மொழியப்பட்ட சட்டங்களைத் திருத்தவோ அல்லது இரத்துச் செய்யவோ அறிக்கை கோருகின்றது. இதில் இணையப் பாதுகாப்புச் சட்டம், சர்வதேச் சிவில், அரசியல் பட்டயச் சட்டம், அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் தொடர்பான சட்ட வரைவு மற்றும் தனிப்பட்ட தரவு பாதுகாப்புச் சட்ட வரைவு ஆகியவையும் அடங்கும்.பொருளாதார நெருக்கடி மற்றும் தற்போதைய கடன் சுமையின் கடுமையான தாக்கங்களையும் - குறிப்பாக ஏழ்மையானவர்கள் மற்றும் பிற பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலைகளில் உள்ளவர்கள், தோட்டத் துறையில் உள்ள மலையகர் தமிழ் சமூகம் உட்பட அனைத்து இலங்கையர்களுக்கு ஏற்படும் தாக்கங்களையும் இந்த அறிக்கை ஆராய்கின்றது.

பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகளை உணரத் தேவையான நிதி இடத்தை அரசுக்கு வழங்கவும், சிக்கன நடவடிக்கைகள் நாட்டின் மனித உரிமைகள் கடமைகளை நிறைவேற்றுவதற்கான திறனைக் குறைமதிப்புக்கு உட்படுத்தாமல் இருப்பதை உறுதி செய்யவும் சர்வதேச நிதி நிறுவனங்கள் மற்றும் வெளிப்புறக் கடன் வழங்குநர்களை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகளுக்கான ஆணையாளர் வோல்கர் டர்க் அந்த அறிக்கையில் வலியுறுத்துகின்றார்.




# வலி.வடக்கில் உள்ள காணிகளை இராணுவத்திடமிருந்து விடுவியுங்கள்

## அரசுத் தலைவரிடம் காணி உரிமையாளர்கள் வலியுறுத்து

வலி வடக்கில் இராணுவ கட்டுப்பாட்டில் உள்ள தனியார் காணிகளை விடுவித்து, அக்காணிகளில் மக்கள் சுதந்திரமாக விவசாய நடவடிக்கை எடுக்க வேண்டும் என அரசுத் தலைவர்யிடம் காணி உரிமையாளர்கள் கோரிக்கை விடுவித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விடுதியில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்து அவர்கள் தமது கோரிக்கையை வலியுறுத்தினர். அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

போர் முடிந்து 16 வருடகாலமாக பாதுகாப்பு காரணங்களுக்காக என கூறி தனியார் காணிகளை கையகப்படுத்தி வைத்துள்ள இராணுவத்தினர் அதில் விவசாயம் செய்கின்றனர். காணி உரிமையாளர்கள் விவசாயம்செய்ய முடியாது வறுமையில் வாடுகின்றனர்.

தனியார் காணிகளை அடாத்தாக பிடித்து விவசாயம் செய்வது சட்டவிரோதமானது. அது மாத்திரமின்றி மக்களின் வரிப்பணத்தில் சம்பளம் பெறும் இராணுவத்தினர்.

எவ்வாறு விவசாயம், பண்ணனை, வியாபாரங்கள் நடாத்தி வருமானத்தை பெற முடியும்? அவ்வாறு பெறப்படும் பணம் எங்கே செல்கின்றது ? அந்த பணம் திறைசேரிக்கு அனுப்பப்படுகிறதா ? என்ற கேள்விகளும் எழுந்துள்ளன.

எனவே போர் முடிந்து 16 வருட காலமாக பாதுகாப்பு காரணம் என கூறி தனியார் காணிகளை அடத்தாக பிடித்து விவசாயம் செய்து வருமானத்தை ஈட்டி வருவதானல் காணி உரிமையாளர்களுக்கு நஷ்ட ஈடுகளை வழங்க வேண்டும்.

அதேவேளை, அவர்களின் காணிகளை உடனடியாக விடுவித்து, அவர்களை விவசாயம் செய்து அம்பது வாழ்வாதரத்தை மேம்படுத்த அரசுத் தலைவர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதேவேளை, நடந்து செல்லவோ, துவிச்சக்கர வண்டியில் செல்லவோ முடியாத நிலை காணப்படுவதுடன், இரவு 07 மணி முதல் காலை 06 மணி வரையில் போக்குவரத்துக்கு தடை போன்ற கட்டுப்பாடுகளுடன் திறக்கப்பட்டுள்ள பலாலி வீதியால் மக்கள் சுதந்திரமாக போக்குவரத்து செய்வதற்கு கட்டுப்பாடுகளை நீக்க வேண்டும் என மேலும் தெரிவித்தார்.

## உயிர்த்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கைகளைஎடுக்குமாறுஅரசாங்கத்தை வலியுறுத்துகின்றோம்.

இதன் போது அருண ஜயசேகரவை தவிர்த்து விசாரணைகளை முன்னெடுத்து, அவர் மீது குற்றச்சாட்டுக்கள் உள்ளனவா இல்லையா என்பதையும் ஆளும்தரப்பு வெளிப்படுத்த வேண்டும். உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களை ஆளும்தரப்பின் மீது சுமத்த எதிர்க்கட்சிகள் முயற்சிப்பதாக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ குறிப்பிட்டிருக்கின்றார். யார் மீதும் குற்றச்சாட்டுக்களை சுமத்துவது எமது நோக்கமல்ல. உண்மையான சூத்திரதாரி யார் என்பது இனங்காணப்பட்டு, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி வழங்கப்பட வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

கடந்தஆளும்தரப்பின்போதுஅப்போதைய சுகாதார அமைச்சர் கெஹெலியவுக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டது. எனினும் அதனை நிறைவேற்ற இடமளிக்கப்பட மாட்டாது என அப்போதைய ஆளுங்கட்சி கூறியது. ஆனால் இறுதியில் கெஹெலியவுக்கு என்ன நடந்தது? எனவே ஆளுங்கட்சியானாலும் எதிர்க்கட்சியானாலும் எம்.பி.யொருவர் மீது குற்றச்சாட்டுக்கள்முன்வைக்கப்பட்டால்அவை தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து உண்மையை வெளிப்படுத்துமாறு வலியுறுத்துகின்றோம் என்றார்.

## புதிய பொலிஸ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும்பொலிஸ் அத்தியட்சகர் ஆகிய மூன்று பதவி நிலைகளையும் கடந்து பொலிஸ் மா அதிபர் பதவிக்கு தெரிவான முதலாவது பொலிஸ்மா அதிபராக சட்டத்தரணி பிரியந்த வீரசூரிய கருதப்படுகிறார்.

முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் மீது சுமத்தப்பட்ட அதிகார துஸ்பிரயோகம்மற்றும்துர்நடத்தைதொடர்பில் முன்வைக்கப்பட்டகுற்றச்சாட்டுக்கள்2002ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க அலுவலர்களை அகற்றும் (நடவடிக்கைமுறை) சட்டத்தின் பிரகாரம் விசாரிக்கப்பட்டு நாடாளுமன்றத்தில் 177 பெரும்பான்மை வாக்குகளினால் நிறைவேற்றப்பட்டது.

இதனைத் தொடர்ந்து பொலிஸ் மாஅதிபர் பதவிக்குபிரியந்தவீரசூரியவின்பெயரைஅரசுத் தலைவர் அநுரகுமார முன்மொழிந்தார்.இந்த பரிந்துரைக்கு அரசமைப்பு பேரவை அரசமைப்பின் 61(ஈ).(ஆ) பிரகாரம் ஏகமனதாக ஒப்புதலளித்தது.

## சிறைச்சாலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒழிப்பு ஆணைக்குழுவினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

2024 ஆம் ஆண்டு காலப்பகுதியில் சிறைச்சாலையில் இருந்த கைதி ஒருவர் சுகயீனமடைந்த நிலையில் வெலிக்கடை சிறைச்சாலையில்அனுமதிக்கப்பட்டநிலையில் அவரை தொடர்ந்து வைத்தியசாலையில் அனுமதிப்பத்து சிகிச்சையளிப்பதற்கு 15 இலட்சம் ரூபா இலஞ்சம் கோரப்பட்டுள்ளது.

இந்த 15 இலட்சம் ரூபாவில் முதற்கட்டமாக 3 இலட்சம் ரூபாவை இலஞ்சமாக பெற்றுக்கொண்டமுன்னாள்பிரதிபணிப்பாளர்-சிறைச்சாலை சுகாதார சேவை , அங்கொட தேசிய மனநல நிறுவனத்தின் தற்போதைய பதில்பணிப்பாளராககடமையாற்றும்வைத்தியர் ரணசிங்க ஆராச்சிகே ஹேமந்த ரணசிங்க இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டுக்காக இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வுசெய்வதற்கானஆணைக்குழுவின் அதிகாரிகளால் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டுள்ளார்.

## சுப்ரீம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பில் அமைந்துள்ள முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்ரமசிங்கவின் பணியகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

‘சுப்ரிம்செட்’ செயற்கைசெய்மதிதொடர்பில் பிரதமர் ஹரிணி நாடாளுமன்றத்துக்கு முன்வைத்தஅறிவிப்புபிழையெனஅமைச்சர் வசந்தசமரசிங்கமறுநாள்நாடாளுமன்றத்தில் தெரிவித்த கருத்தினால் மக்கள் மத்தியில் சலசலப்பு ஏற்பட்டுள்ளது.

ஏனெனில் பிரதமர் ஹரிணி, நாடாளுமன்றத்தில் இதுதொடர்பில் இரண்டு தடவைகள் ஒத்திவைக்கப்பட்ட கேள்விக்குப் பதிலளித்திருந்தார். அதுவும் நிதி அமைச்சின் செயலாளரினால் தயாரித்து வழங்கப்பட்ட பதிலையே அரசுத் தலைவர் சார்பாக முன்வைத்திருந்தார்.

இவ்வாறான நிலையில் நாட்டின் இரண்டாவது பிரஜையான பிரதமர் நாடாளுமன்றத்தில் தெரிவித்த அந்த விடயத்தை மறுநாள் அமைச்சர் வசந்த சமரசிங்க பிழையென தெரிவித்தமை பெரும் பிரச்சினையாகும்.

பிரதமரினால் முன்வைக்கப்பட்ட தகவலில் ஏதாவது தவறு இருந்திருந்தால், அது தொடர்பில் அமைச்சரவையில் கலந்துரையாடி, அதனை நாடாளுமன்றத்தில் சரி செய்திருக்கலாம். அவ்வாறு இல்லாமல் அமைச்சர் வசந்த சமரசிங்க, இவ்வாறு வெளிப்படையாக பிரதமரின் கூற்றை பிழையென தெரிவித்ததன் மூலம் அவர் அமைச்சரவையின் கூட்டுப்பொறுப்பை மீறியுள்ளார்.

அமைச்சரவையின் கூட்டுப்பொறுப்பை மீறியஅமைச்சர்வசந்தசமரசிங்கவுக்குஎதிராக அரசுத்தலைவர் எடுக்கும் நடவடிக்கை என்ன என கேட்கிறோம். எம்மை பொறுத்தவரை அமைச்சர் பதவி விலகவேண்டும்.

அதேநேரம் சுப்ரிம் செட் செயற்கை செய்மதி தொடர்பில் ஆளும்தரப்புக்குள் மூன்று கருத்துக்கள் தெரிவிக்கப்படுகின்றன. இந்த செயற்கை செய்மதிக்கு ஆளும்தரப்பில் இருந்து ஒருசதமேனும்செலவிடப்படவில்லை என பிரதமர் நாடாளுமன்றத்துக்கு தெரித்தார்.

ஆனால் ஆளும்தரப்பின் பணம் செலவிடப்படுள்ளதாக அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்திருந்தார். அதேநேரம் சுப்ரிம் செட் செயற்கை செய்மதி என்ற பெயரில் இலங்கைக்கு ஒதுக்கப்பட்ட தலங்களில் செய்மதி ஒன்று இல்லையென அமைச்சரவை பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்திருந்தார்.இவ்வாறுஆளும்தரப்புக்குள் இருந்து பரஸ்பர விரோதமான கருத்துக்கள் தெரிவிக்கப்படுவதால் இதன் உண்மை தன்மை என்ன என்பதை ஆளும்தரப்பு நாட்டுக்கு வெளிப்படுத்த வேண்டும் என்றார்.

## பிரதிப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சாட்சிகளைப் பெற்றுக் கொள்ளக் கூடிய துறைகளில் அவர் முக்கிய பதவியை வகிப்பதானது விசாரணைகளுக்குத் தடையாகவே இருக்கும்.

இது தொடர்பில் கத்தோலிக்க மக்களும் கடும் எதிர்ப்பினை வெளியிட்டிருக்கின்றனர். அரசுத் தலைவர் வழங்கிய வாக்குறுதியை அவரால் இன்றுவரை நிறைவேற்ற முடியாமல் போயுள்ளது. நம்பிக்கையில்லா பிரேரணை மீதான விவாதம் எந்தக் காரணத்துக்காகவும் தாமதப்படுத்தப்படக் கூடாது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி நிலைநாட்டப்பட வேண்டும். ஆனால் ஆளும்தரப்பு இதனை விடுத்து காணாமல் போன செய்மதியை மீண்டும் காணாமல்ஆக்குவதற்கானநடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறது.

இந்த செய்மதியை அடிப்படையாகக் கொண்டு ராஜபக்சர்கள் ஊழல், மோசடியில் ஈடுபட்டிருப்பார்கள் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. இது தொடர்பில் பிரதமரும் அமைச்சரொருவர் முரண்பட்ட கருத்துக்களைக் கூறுகின்றனர். எந்த வகையிலும் இருவர் கூறிய கருத்துக்களும் சரியாக இருப்பதற்கு வாய்ப்பில்லை. யாரோ ஒருவரது கருத்து தவறாகும். அது யாருடைய கருத்து என்பதையும் ஆளும்தரப்பு வெளிப்படுத்த வேண்டும். இது விளையாட்டல்ல. எனவே இந்த விவகாரம் தொடர்பில் நியாயமான விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com









இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 14.08.2025இல் வெளியிடப்பெற்றது